**தமிழ்நாடு கலைத்திட்ட வடிவமைப்பு 2025**

**பரிந்துரைக்கப்பட்ட வரைவுப் பாடத்திட்டம், கற்பித்தல் முறைகள் மற்றும் மதிப்பீட்டு உத்திகள்**

**வகுப்பு – 6,7,8 – தமிழ் - உயர்தொடக்கநிலை**

TNSCERT DRAFT SYLLABUS

மாறிவரும் உலகின் தேவைகளுக்கேற்ப மொழிக்கல்வி அமைய வேண்டும் என்பதை தமிழ்நாடு, மாநிலக் கல்விக் கொள்கை 2025, வலியுறுத்துகிறது. தொன்மையும் இலக்கிய, இலக்கணச் செறிவுமுடைய தமிழ்மொழி, பிற பாடங்களையும் கற்க அடித்தளமாக அமைய வேண்டும். இதற்கெனத் தொடக்கநிலைப் பாடத்திட்டத்தினைத் தொடர்ந்து வளர்நிலையில் உயர்தொடக்கநிலைப் பாடத்திட்டம் அமைகின்றது. எழுத்துகளை அறிந்து படிப்பதில் தொடங்கி, கருத்தை எடுத்துக்கூறவும் பகுத்தாயவும் விளக்கவும் சிந்திக்கவும் வழிகாட்டுகிறது. மொழியின் சிறப்புணர்ந்து நூல்களை விரும்பிப் படிப்பதாக மேம்படவும் மொழியின் கட்டமைப்பைத் தெரிந்துகொண்டு பிழையின்றி மொழியைப் பயன்படுத்த உதவுகிறது. தம் எண்ணங்களைக் கலை, அழகியல் உணர்வுகளோடு படைப்பாற்றலாக வெளிப்படுத்தவும் வாய்ப்பளிக்கிறது; கணினித் தொழில்நுட்பம், செயற்கை நுண்ணறிவு செறிந்த எதிர்காலச் சூழ்நிலைக்கு ஏற்பக் குழந்தைகள், தம் மொழியறிவை வளர்த்துக்கொள்ளவும் வழிவகுக்கிறது; வளரிளம் பருவக் குழந்தைகள், தமிழ்மொழியைத் தாம் வாழும் சூழலுக்கு ஏற்பப் பொருள்படவும் திறம்படவும் பயன்படுத்தும் திறன்பெறுதலை உறுதிசெய்கிறது. மொத்தத்தில், இப்பாடத்திட்டம் மொழிக்கல்வியோடு சமூக நீதி, பாலின சமத்துவம், நன்னெறிகள், வாழ்வியல் திறன்கள், 21ஆம் நூற்றாண்டுத் திறன்கள் முதலிய அனைத்தையும் உள்ளடக்கியதாக இருக்கும்.

| **கலைத்திட்ட இலக்கு -1**<br>விளக்குதல், சிந்தித்தல், பகுத்தாய்தல், பதில்கூறுதல் வாயிலாகக் கருத்துப் பரிமாற்றத் திறன் பெறுதல். **(கேட்டல், பேசுதல், எழுதுதல்)** | | | |
|---|---|---|---|
| **திறன்** | **கற்றல் விளைவுகள்** | | |
| | **ஆறாம் வகுப்பு** | **ஏழாம் வகுப்பு** | **எட்டாம் வகுப்பு** |
| 1.1 கேட்டும் படித்தும் அறிந்த தகவல்களை எடுத்துக்கூறுதல்.<br>சிந்தித்துப் பதில் கூறுதல்.<br>பிறர் முன்னிலையில் பகிர்தல். | நூல்கள், இதழ்கள், விளம்பரங்கள், அறிவிப்புகள், தகவல் பலகைகள் வாயிலாக அறிந்த தகவல்களைச் **சொந்த மொழியில் எடுத்துக் கூறுவர்.** (வகுப்பறையிலும் தன்னைச் சுற்றியும் நிகழும் நிகழ்வுகள், உரிய விழிப்புணர்வு அறிவிப்புகள்) | நூல்கள், இதழ்கள், அறிவிப்புகள், அட்டவணைகள், தகவல் பலகைகள் வாயிலாகக் கேட்டும் படித்தும் அறிந்த தகவல்களைத் **தொகுத்துக் கூறுவர்.** (விழாக்கள், சமூகத்தில் நடைபெறும் நிகழ்வுகள்) | அறிவிப்புகள், தகவல் பலகைகள், வரைபடங்கள், இதழ்கள் மற்றும் நூல்கள் வாயிலாகக் கேட்டும் படித்தும் அறிந்த தகவல்களைச் **சுருக்கியும் விரித்தும் தம் கருத்தை இணைத்தும் கூறுவர்.** (இலக்கிய மன்றம், ஆண்டுவிழா, போட்டிகள்) |
| 1.2 விமரிசனப் பார்வையுடன் உரையாற்றுதல்.<br>விளக்கிக் கூறுதல். | கேட்ட, பார்த்த, படித்த தகவல்கள் குறித்த தம் **கருத்தை முறைப்படுத்திக் கூறுவர்.** (வானொலி, தொலைக்காட்சி | கேட்ட மற்றும் படித்த தகவல்களைப் பற்றிச் சமூக விழிப்புணர்வுடன் **பேசுவர்; பகுத்தாய்வர்.** (நூல்கள் மற்றும் செய்தி இதழ்களில் வெளிப்படுத்தப்படும் | கேட்ட, படித்த தகவல்கள் குறித்துப் **பகுத்தாய்ந்து, ஒப்பிட்டு உரையாற்றுவர்.** (காட்சி மற்றும் அச்சு ஊடகச் செய்திகள் இன்ன பிற) |

| | | | |
|---|---|---|---|
| | மற்றும் செய்தி இதழ்களில் வெளிவரும் விளம்பரம், அறிவிப்புகள் போன்றவை) | அறிவிப்புகள், சிறார் திரைப்படங்கள், ஆவணப்படங்கள், செய்திகள் போன்றவை) | |
| **1.3** தெரிந்துகொண்ட செய்திகளைப் பிறருக்கு அறிவிக்க ஏற்றவாறு வேறுபட்ட வடிவங்களில் எழுத்தில் பதிவு செய்தல். | அறிவிப்பு, விளம்பரம் ஆகிய வடிவங்களுக்கு ஏற்ற எளிய நடையில் **செய்தித் தலைப்புகளை உருவாக்கி எழுதுவர்.**<br>(கலைத்திருவிழா) | கையெழுத்து இதழ், பள்ளி இதழுக்கு ஏற்பச் **செய்திகளை விரித்து எழுதுவர்.**<br>(அழைப்பிதழ், வாழ்த்துச் செய்தி) | வானொலி, செய்தி இதழ்களில் வெளியிடத் தக்கவாறு **தகவல்களை எழுத்தில் பதிவுசெய்வர்.**<br>(சமூக, கலாச்சார உணர்வும் விழிப்புணர்வும் தரும் நிகழ்வுகள்) |
| 1.4 நேர்காணலைக் கேட்டுப் புரிந்துகொள்ளுதல்; அது குறித்துப் பேசுதல். தாமே நேர்காணலை நிகழ்த்துதல். | நேர்காணல்களைக் கேட்டுப் புரிந்துகொள்வர். கேட்டுப் புரிந்துகொண்ட கருத்துகளைக் **கூறுவர்.** (எ.கா. சாதனையாளர்கள், உழைப்பாளர்கள், தலைவர்கள், சமூக முன்னேற்றத்திற்குப் பங்களித்தவர்களுடனான நேர்காணல்.) | நேர்காணலில் கேட்ட செய்திகளைப் பற்றிப் பேசுவர். தாமாக நேர்காணல்களை நடத்துவதற்கான **எளிய வினாக்களை உருவாக்குவர்.**<br>(உழவர், தூய்மைப் பணியாளர், பேரிடர் கால மீட்புப் பணியாளருடன் நேர்காணல் நிகழ்த்துதல்.) | மாதிரி நேர்காணலை நிகழ்த்துவர். நேர்காணல் செய்திகளைக் கேட்டுப் பதிவு செய்வர். நேர்காணலில் **கேட்டதைத் தொகுத்துக் கூறுவர்.**<br>(மலைவாழ் மக்கள், மீனவர்கள், விவசாயிகள், நெசவாளர்கள், விஞ்ஞானிகளுடன் நேர்காணல் நிகழ்த்துதல்.) |
| **1.5** கேட்பொலி, காணொலிகளுக்குத் தேவையான உள்ளடக்கத்தை உருவாக்குதல். | கேட்பொலி, காணொலிகளின் **உள்ளடக்க வடிவத்தைப் புரிந்துகொள்வர்.**<br>(எ.கா. துண்டு அறிக்கை, முழக்கத்தொடர், விளம்பர அறிவிப்புகள் எழுதுதல்.) | கேட்பொலி, காணொலிகளுக்குத் தேவையான உள்ளடக்கத்தைப் **புரிந்துகொண்டு உருவாக்குவர்.**<br>(எ.கா. நகைச்சுவைத் துணுக்குகள், அழைப்பிதழ், வாழ்த்துச்செய்தி, அறிவிப்புகள் எழுதுதல்.) | கேட்பொலி, காணொலிகளுக்குத் தேவையான உள்ளடக்கத்தை உருவாக்கி, **பின்னணிக் குரல் கொடுப்பதற்குப் பயிற்சி பெறுவர்.**<br>(எ.கா. கதையைக் குறும்படமாக மாற்றக் கதை-வசனம் எழுதுதல்.) |
| **கலைத்திட்ட இலக்கு -2**<br>மொழிக்கூறுகளை அடையாளம்கண்டு பயன்படுத்தும் திறன் பெறுதல். (ஓசை, பெயர், வினை, அடை, இணைப்புச்சொற்கள், உவமை போன்றவை)<br>(பேசுதல், எழுதுதல், பயன்பாட்டு இலக்கணம், சொற்களஞ்சியம்) | | | |
| 2.1 இலக்கிய வடிவங்களில் உள்ள மொழிக்கூறுகளை அடையாளம் காணுதல். | இலக்கிய வடிவங்களில் உள்ள **மொழிக்கூறுகளைக் கண்டறிவர்.**<br>(பெயர், வினை)<br>உரைப்பத்தியில் உள்ள பெயர், வினையைக் கண்டறிவர். | இலக்கிய வடிவங்களில் உள்ள மொழிக்கூறுகளை **அடையாளம் கண்டு பயன்படுத்துவர்.**<br>(பழமொழி, புதிர், மரபுத்தொடர், நகைச்சுவை) | இலக்கிய வடிவங்களைப் புரிந்து கொண்டு **விமரிசனம் செய்வர்.**<br>(ஓசை, உவமை, உருவகம், வருணனை, விடுகதை) |
| 2.2 இலக்கிய வடிவங்களில் உள்ள மொழிக்கூறுகளைப் பாராட்டுதல்; பயன்படுத்துதல்; எழுத முயற்சி செய்தல். | பாடப்பகுதியில் உள்ள மொழிக்கூறுகளை **அடையாளம் காண்பர்.**<br>(எதுகை, மோனை, இயைபு)<br>அக்கம், பக்கம்<br>அம்மா, அண்ணன்<br>வந்தேன், தந்தேன் | பாடப்பகுதியில் உள்ள மொழிக்கூறுகளைப் **படித்துச் சுவைப்பர்.** தாமும் **எளிய நடையில் எழுத முயற்சி செய்வர்.**<br><br>(பாரதியார், பாரதிதாசன் கவிதைகள்) | பாடப்பகுதியில் உள்ள மொழியின் **நயங்களை உணர்ந்து, கவிதை எழுதுவர்.**<br>(எதுகை, மோனை, சொல் , பொருள், சந்தம்)<br>நிலா குறித்து நான்கு வரிக் கவிதை எழுதுதல் |

TNSCERT DRAFT SYLLABUS

| | | | |
|---|---|---|---|
| **கலைத்திட்ட இலக்கு - 3**<br>மொழியின் கட்டமைப்பைப் புரிந்து (எழுத்து, சொல், தொடர்) பேச்சிலும் எழுத்திலும் பிழையின்றி வெளிப்படுத்தும் திறன் பெறுதல். (படித்தல், எழுதுதல், பயன்பாட்டு இலக்கணம், அகராதிப் பயன்பாடு) | | | |
| 3.1 அடிப்படை மொழியியல் கூறுகளைப் பாடப்பகுதி வாயிலாகப் **புரிந்துகொள்ளுதல்.** | பாடப்பகுதியிலிருந்து அடிப்படை மொழியியல் கூறுகளைப் புரிந்துகொள்வர்; முறையாகப் பயன்படுத்துவர்.<br>(திணை, பால், எண், இடம், காலம்) | பாடப்பகுதியிலிருந்து புரிந்து கொண்ட அடிப்படை மொழியியல் கூறுகளை **வகைப்படுத்துவர்; முறையாகப் பயன்படுத்துவர்.**<br>(முன் கற்றவற்றோடு மயங்கொலி, இன, சுட்டு, வினா எழுத்துகள்) | பாடப்பகுதியிலிருந்து அடிப்படை மொழியியல் கூறுகளைப் **புரிந்துகொண்டு பேச்சிலும் எழுத்திலும் முறையாகப் பயன்படுத்துவர்.**<br>(முன் கற்றவற்றோடு மொழி முதல் எழுத்துகள், மொழி இறுதி எழுத்துகள்) |
| 3.2 இலக்கிய வடிவங்களைப் பிழையின்றி எழுதுதல். | குறிப்புகளைக் கொண்டு கதை, பாடல், துணுக்கு, அறிவிப்பு, செய்திப் பகுதிகளைக் **கூறுவர்; பிழையின்றி எழுதுவர்**. எழுவாய், பயனிலை, செயப்படுபொருளைத் தொடர்களில் முறையாகப் பயன்படுத்தி எழுதுவர். | கருத்துகளைத் தொகுத்து உரிய மொழிநடையுடன் **தொடர்களை உருவாக்கிக் கூறுவர். எழுதுவர்.** செய்தி, வினா, உணர்ச்சி, கட்டளை போன்ற தொடர் வகைகளை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர். | கருத்துகளை வெளிப்படுத்த ஏற்ற மொழிநடையை அறிந்து எழுதுவர். உரையாடலுக்கு ஏற்ற தொடர் வகைகள், வழக்குகளைப் (பேச்சு வழக்கு, எழுத்து வழக்கு) **புரிந்துகொண்டு படைப்பை உருவாக்குவர்.** (பேச்சுரை, நாடகம்) |
| 3.3 கடிதம், கட்டுரை, விண்ணப்பம், அறிக்கை எழுதுதல், செம்மைப்படுத்துதல். | கடிதங்கள், கட்டுரைகளின் **வகைகளை அறிந்து எழுதுவர்**. நிறுத்தக்குறிகளைப் பயன்படுத்துவர்.<br>(விடுப்பு விண்ணப்பம், தன்வரலாறு) | பல்வேறு வகையான கடிதங்கள், கட்டுரைகள், விண்ணப்பங்களை **எழுதுவர். செம்மைப்படுத்துவர். நிறுத்தக்குறிகளை** முறையாகப் பயன்படுத்துவர்.<br>(உறவுமுறை, அலுவலகக் கடிதம்) | பல்வேறு வகையான கடிதங்கள், கட்டுரைகள், அறிக்கைகளை எழுதியும் நிறுத்தக் குறிகளைப் பயன்படுத்தியும் செம்மைப்படுத்துவர். **இணையவழி விண்ணப்பங்களை நிரப்ப முயற்சி செய்வர்**.<br>(நிறுத்தக்குறிகள், எளிய அறிக்கைகள், படிவங்கள், கடிதங்கள்) |
| **கலைத்திட்ட இலக்கு - 4**<br>தமிழ்மொழியின் அற இலக்கியங்கள் மற்றும் செவ்வியல் இலக்கியங்கள் வழியாகப் படித்துப் புரிந்துகொண்ட கருத்துகளை, விழுமியங்களை, வாழ்வியல் திறன்களை உணர்ந்தும் சிந்தித்தும் பின்பற்றவும், பயன்படுத்தவும், பகிரவும் திறன் பெறுதல். (கேட்டல், பேசுதல், படித்தல், தானே கற்றல், சொற்களஞ்சியம், அகராதிப் பயன்பாடு) | | | |
| 4.1 அறஇலக்கியங்கள் மற்றும் செவ்வியல் இலக்கியங்களின் கருத்துகளைப் படித்துணர்ந்து பகிர்தல். | பாடப்பகுதியில் உள்ள இலக்கியங்களைப் **புரிந்து படிப்பர்.** | இலக்கியங்கள் வெளிப்படுத்தும் பல்துறை சார்ந்த கருத்துகள், அவற்றின் கருத்து வெளிப்பாட்டு முறையைப் **பகிர்ந்துகொள்வர்.** | படித்த இலக்கியப் பகுதிகளின் மொழிநடையை, கலைச்சொற்களை, கருத்துகளைப் புரிந்துகொண்டு **சொந்த மொழியில் பேச்சாக, எழுத்தாக வெளிப்படுத்துவர்.** |
| 4.2 பாடப்பகுதியில் இடம்பெற்ற இலக்கியங்களின் பல்துறை சார்ந்த சொற்கள், | பாடப்பகுதியில் இடம்பெற்ற இலக்கியச் சொற்களின் பொருளை **அகராதி மூலம் கண்டறிந்து புரிந்துகொள்வர்.** | பாடப்பகுதியில் இடம்பெற்ற இலக்கியங்களின் மொழிநடையை, கலைச்சொற்களை, **கருத்துகளைப் புரிந்துகொண்டு பயன்படுத்துவர்.** | பாடப்பகுதியில் உள்ள பல்துறை சார்ந்த இலக்கியப் பகுதியின் சொற்களையும் தொடர்களையும் புரிந்துகொண்டு இடத்திற்கேற்பப் பயன்படுத்திப் **பேசுவர்; எழுதுவர். நயம் அறிந்து சுவைப்பர்.** |

| | | | |
|---|---|---|---|
| கலைச்சொற்கள், தொடர்களைப் புரிந்து பயன்படுத்துதல். | | | |
| 4.3 இலக்கியத்தில் , மொழியில் இருந்து பெற்ற பண்பாடு, விழுமியங்கள் முதலியவற்றைப் போட்டிகள், கலை, இலக்கிய மன்றச் செயல்பாடுகளின்வழி வெளிப்படுத்துதல். | மொழியின் வாயிலாக உணர்ந்துகொண்ட தமிழர் பண்பாட்டையும் விழுமியத்தையும் **பின்பற்றுவர்.** திருக்குறள் முதலான அறநெறி இலக்கியங்கள் குறித்த வினாடி வினாப் போட்டிகளில் பங்கேற்பர். | மொழியின் வாயிலாகத் தமிழர் பண்பாட்டையும் விழுமியத்தையும் வாழ்வியல் நெறிகளையும் அறிந்து **தம் வாழ்வில் பின்பற்றுவர். பிறருக்கும் பகிர்வர்.** திருக்குறள் முதலான அறநெறி இலக்கியக் கருத்துகளைக் கலை, இலக்கிய மன்ற நிகழ்ச்சிகளில் வெளிப்படுத்துவர். | மொழியின் வாயிலாகத் தமிழரின் விழுமியங்கள், வாழ்வியல் திறன்களை உணர்ந்து **தம்மை மேம்படுத்திக் கொள்வர்.** இலக்கியம் காட்டும் வாழ்வியலை உற்றுநோக்கிச் **சமூகச் சிக்கல்களுக்குத் தீர்வுகாண முயற்சி செய்வர்.** திருக்குறள் முதலான அறநெறி இலக்கியக் கருத்துகளை நாடகம், விவாதமேடை போன்ற கலை, இலக்கிய நிகழ்வுகளில் காட்சிப்படுத்துவர். |
| **கலைத்திட்ட இலக்கு - 5**<br>தமிழ்மொழியின் தொன்மையையும் சிறப்பையும் உணர்ந்து விரும்பியும் தேடியும் படிக்கவும் சிந்தனையை வெளிப்படுத்தவும் மொழிபெயர்க்கவும் (குறிப்பெடுத்தல், சுருக்கி, விரித்து எழுதுதல், மதிப்புரை எழுதுதல்) புதியன படைக்கவும் திறன் பெறுதல். (பேசுதல், எழுதுதல், படைப்பாற்றல், சொற்களஞ்சியம்) | | | |
| 5.1 தமிழ்மொழியின் தொன்மையையும், செறிவையும் உணர்ந்து விரும்பியும் தேடியும் படித்தல். படித்தவற்றை மதிப்பாய்வு செய்தல். | விரும்பியும் தேடியும் படிப்பர். **மையக் கருத்தைக் கூறுவர். எழுதுவர்.** சொற்களை, தொடர்களை மொழிபெயர்ப்பர். கலைச்சொற்களுக்கான பொருளை அகராதி கொண்டு கண்டறிவர். (வாசிப்பு இயக்க நூல்கள், துணைப்பாடம், சிறார் திரைப்படம், கவிதை, விளம்பரம்) | விரும்பியும் தேடியும் படித்தவற்றைக் **குறிப்பெடுப்பர்** , கதையைச் **சுருக்கியும் விரித்தும் கூறுவர், எழுதுவர்.** சொற்கள், தொடர்களை மொழிபெயர்ப்பதோடு அகராதியில் கண்டறிந்த அருஞ்சொற்களைப் பயன்படுத்துவர். (வாசிப்பு இயக்க நூல்கள், துணைப்பாடம், சிறார் திரைப்படம், கவிதை, விளம்பரம்) | விரும்பியும் தேடியும் படித்த நூல்களிலுள்ள பாத்திரப்படைப்புகளை விமரிசனம் செய்வர், **கதையைத் தொகுத்துக் கூறுவர், மறு உருவாக்கம் செய்வர்.** தொடர்கள், சிறு பத்திகளை மொழிபெயர்ப்பு செய்வர். அருஞ்சொற்களையும் கலைச்சொற்களையும் உரியவாறு பயன்படுத்துவர். (வாசிப்பு இயக்க நூல்கள் , துணைப்பாடம், நாடக நூல்கள், சிறார் திரைப்படம், கவிதை, விளம்பரம்) |
| 5.2 செயல்திட்டங்களில் புத்தக, ஊடக வளங்களைப் பயன்படுத்தும்போது இணையப் பாதுகாப்பைக் கவனத்தில் கொள்ளுதல். | செயல்திட்டத்திற்கு ஏற்ற செய்திகளையும் படங்களையும் சேகரித்துப் படக்கதை உருவாக்குவதில் இதழ்கள், மொழிபெயர்ப்புச் செய்திகள், நூல்கள், மின்னுரு வளங்களோடு இணையத்தையும் **கவனத்துடன் பயன்படுத்துவர்.** | புத்தக, ஊடக வளங்களைப் பயன்படுத்திப் பொன்மொழிகள், பழமொழிகள் சார்ந்த **கதைகளை உருவாக்குவர்.** மொழிபெயர்ப்புப் பகுதிகளைப் படித்துச் சுவைப்பர். தேவைப்படும் கருத்துகளை மின்னுரு வளங்களிலும் இணையத்திலும் **பாதுகாப்புடன் தேடும் விழிப்புணர்வு பெறுவர்.** | செயல்திட்டங்கள், ஒப்படைவுகள் முதலான செயல்களில் புத்தக, ஊடக வளங்களைப் பயன்படுத்துவர். **புதிய படைப்புகளை உருவாக்குவர்.** மொழிபெயர்ப்புப் பகுதிகளைப் படித்துக் கருத்தை வெளிப்படுத்துவர். காணொலிகள், இயங்குருப் படங்கள் உருவாக்கத்திற்கு **இணையத்தை முறையாகப் பயன்படுத்துவர்.** |

TN-SCERT-DRAFT SYLLABUS

**கற்றல் அணுகுமுறைகள் –**

**தன்னம்பிக்கையுடன் பேசுதல், சரளமாகப் படித்தல், கருத்தை எழுத்தில் வெளிப்படுத்தல், இலக்கியத்தைப் படித்துச் சுவைத்து வெளிப்படுத்தல், சொற்களஞ்சியத்தைப் பெருக்கிக் கொள்ளுதல், நன்னெறிகளையும் வாழ்வியல் திறன்களையும் இலக்கியங்கள் வழியாக உணர்ந்து பின்பற்றுதல் போன்ற திறன்களைப் பெற உயர்தொடக்க நிலையில் பின்பற்றப்படும் கற்றல் அணுகுமுறைகள் –**

- ✓ **கருத்துப் பரிமாற்றத் திறன்வழி கற்றல்** (Communicative Language Teaching)
- ✓ **செயல்பாடுகள் அடிப்படையிலான கற்றல்** ( Activity-Based Learning)
- ✓ **மொழித்திறன்களை ஒருங்கிணைத்துக் கற்றல்** (Integrated Skill Approach)
- ✓ **பயன்பாட்டு இலக்கணம் வழியாகக் கற்றல்** (Grammar in Context Approach)
- ✓ **இலக்கியப் படைப்பின் அடிப்படையில் கற்றல்** (Literature-Based Approach)
- ✓ **செயல்திட்ட அடிப்படையிலான கற்றல்** (Project-Based Learning)

**பாடப்பொருள் –**

- ✓ **புரிந்து படித்தல், ஆழ்ந்து படித்தல், நயம் அறிந்து சுவைத்தல், புதிய சொற்களின் பொருளறிந்து பயன்படுத்துதல், பகுப்பாய்வு செய்து கற்றல், புதியன கற்று படைப்பாற்றல் திறன் பெறுதல், கலந்துரையாடல் போன்ற கற்றல் வெளிப்பாடுகளை மாணவர்கள் பெறும் வகையில் எளிய, இலகுவான வகுப்புக்கு ஏற்ற தமிழ்மொழி சார்ந்த கதைகள், பாடல்கள், முற்கால, தற்கால இலக்கியப் பகுதிகள், உரைகள், கலந்துரையாடல்கள், ஆர்வமூட்டும் நகைச்சுவைத் துணுக்குகள், செய்திகள் முதலான படைப்புகள் பாடப்பொருளாக அமையும்.**

**கலைகள், விழுமியங்கள், வாழ்வியல் திறன்கள் –**

- ✓ **பாடப்பொருளானது உரையாடல், கலந்துரையாடல், ஒப்படைவு, செயல்திட்டம், களப்பயணம், நேர்காணல், போலச் செய்தல், கதை கூறுதல், நாடகம் நடித்தல், போன்ற கலை வெளிப்பாட்டுச் செயல்பாடுகள் வழியாக விழுமியங்களையும், வாழ்வியல் திறன்களையும் வலியுறுத்துவதாக அமையும்.**

**மதிப்பீடு -**

- ✓ **வகுப்பறைச் செயல்பாடுகளில் மாணவர்களின் பங்கேற்பு, மொழி வெளிப்பாடு, கற்றல் அடைவைப் பெறுதல் ஆகிய கூறுகள் வாய்மொழி, எழுத்துவழியாகவும் செயல்பாடுகளில் பங்கேற்றல் வாயிலாகவும் படைப்பாற்றல் வாயிலாகவும் மதிப்பிடப்படும். மனப்பாட முறையில் அன்றிப் புரிந்து பதில் அளித்தல் கருத்தில் கொள்ளப்படும். சராசரி நிலை தொடங்கி இடைநிலை, உயர்நிலைகளில் சிந்தனை வினாக்கள் அறிமுகப்படுத்தப்படும். படைப்பாற்றல், விழுமியங்கள், வாழ்வியல் திறன்கள் போன்றவை தக்க சூழல்களிலும் வாய்மொழியாகவும் மதிப்பிடப்படும். அச்சமற்ற இலகுவான மதிப்பீடு, கற்றலை வலுவூட்டவும் செறிவூட்டவும் உதவும்.**

TN-SCERT-DRAFT SYLLABUS